பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 30 ஞாயிற்றுக்கிழமை 15.12.2024 கதிர் 038

# தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் யார்? டிசெ. 28 மத்திய செயற்குழுவில் முடிவு

## நேற்றைய கூட்டம் குழப்பத்தில் முடிந்தது




இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின்தலைமைப்பதவியில் மாவை சேனாதிராசா நீடிப்பதை அங்கீகரிப்பதா இல்லையா என்பது தொடர்பில் டிசெம்பர் 28 சனிக்கிழமை வவுனியாவில் கூடவுள்ள அக்கட்சியின் மத்திய செயற்குழுவில் தீர்மானிக்கப்படவுள்ளது. தேவைப்பட்டால் அந்தக் கூட்டத்தில் முதல் பணியாக மாவையின் தலைமைத்துவம் குறித்து வாக்கெடுப்பு நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்தியகுழு கூட்டம் வவுனியாவில் அமைந்துள்ள தனியார் விடுதியில் நேற்று காலை10.30மணிக்குத்தொடங்கிஆரம்பமாகி மாலை 4.30 மணிவரை நடைபெற்றது. கட்சித் தலைமைப் பதவியில் இருந்து 2

## இனி அது ரகசியம் அல்ல!

தமிழ்அரசுக்கட்சியின்நேற்றைய கூட்டம் முற்றிலும் கட்சித் தலைவர் பதவியில் மாவை சேனாதிராசா தொடர்கிறாரா இல்லையா என்பதைப் பற்றிப் பேசுவதாகத்தான் இருந்தது. கட்சியின் மத்திய குழுவிற்கு எதிராகச் செயற்பட்டு ஜனாதிபதித் தேர்தலில் பொதுக் கட்டமைப்பின் வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரிக்கின்றேன் என்று அறிவித்து அவரது பரப்புரைக் கூட்டத்திலேயே கலந்துகொண்டுவிட்டு, 2

## தமிழ் அரசுக் கட்சியிலிருந்து சிலர் உடனே நீக்கப்படுவர் சிலர் இடைநிறுத்தப்படுவர்

### கட்சிப் பேச்சாளர் சுமந்திரன் அறிவிப்பு

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் இருந்து சிலர் நீக்கப்படுவதுடன் சிலர் இடைநிறுத்தப்படுவர் என கட்சியின் பேச்சாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் 7

## யாரையும் நீக்குவதாக தீர்மானம் ஏதுமில்லை

### சிறீநேசன் எம்.பி. தெரிவிப்பு

### பேச்சாளர் பதவிக்கும் உரிமை கோரல்



2024 நாடாளுமன்றத் தேர்தலின்போது கட்சியில் இருந்து விலகி செயற்பட்டவர்களை கட்சியில் இருந்து நீக்குவதாக ஏகமனதாகத் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை. அதேசமயம்நானேதமிழ் அரசுக் 2

## தேர்தல் கூட்டு தொடர்பில் கட்சியே தீர்மானிக்கும்

### சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

அடுத்து வரவுள்ள உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் தமிழ் அரசுக் கட்சியோடு தேர்தல் கூட்டு வைத்துக்கொள்வதற்கு ரெலோவின் தலைமைக் குழு எடுத்த முடிவு குறித்து தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு மற்றும் அரசியல் குழு ஆகியனதான் முடிவெடுக்கும் என்று கட்சியின் யாழ். மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர்சிறீதரன் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று 7

## சபாநாயகரின் பதவி விலகலை ஏற்றார் அநுர

'கலாநிதி' பட்டசர்ச்சையைத்தொடர்ந்துசபாநாயகர் அசோக ரன்வலவின் பதவி விலகலை ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க ஏற்றுக்கொண்டார். 7

## கஜேந்திரகுமாரின் அழைப்பை சுமந்திரன் அடியோடு நிராகரிப்பு

தமிழ் மக்கள் பேரவையின் காலத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனால் தயாரிக்கப்பட்ட அரசமைப்பு வரைவை முன்வைத்து புதிய அரசமைப்பு முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்ற தமிழ் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்றஉறுப்பினர்கஜேந்திரகுமாரின் கோரிக்கையை ஏற்கவேண்டிய அவசியம் தமிழ்அரசுக்கட்சிக்கு இல்லை என்று அதன் பேச்சாளர் சுமந்திரன் தெரிவித்தார். தமிழ் அரசுக்கட்சியின்நிலைப்பாடுகளோடு அவர் இணங்கி வந்தால் 7

## சபாநாயகரின் பதவி விலகல் மூலம் புதிய அரசியல் கலாசாரம் வருகிறது

### அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

சபாநாயகர் பதவி விலகியதன் மூலம் இலங்கையில் புதிய அரசியல் கலாசாரம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தமது கல்வித் தகைமை தொடர்பான ஆவணங்களைஉறுதிப்படுத்தமுடியாமையால் ஒழுக்கமான முறையில் சபாநாயகர் பதவி விலகியுள்ளார்.இந்த நாட்டில் இதற்கு முன்னர் இவ்வாறான முன்மாதிரியான அரசியல் கலாசாரம் இருக்கவில்லை என்றார் அவர்.

களுத்துறை வர்த்தக சம்மேளத்தினால் வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வரலாற்றில் முதல் தடவையாக நாட்டு மக்கள் அனைவரும் 7

## இறக்குமதியான 75,000 கிலோ அரிசி பாவனைக்கு உதவாதது

அரிசித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக ஆளும்தரப்பின் அனுமதியுடன் தனியாரால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியில் 75 ஆயிரம் கிலோ அரிசி பாவனைக்கு உதவாதது என்று அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

இறக்குமதி செய்யப்பட்ட 3 கொள்கலன்களில்இருந்தபெருமளவான அரிசி இவ்வாறு பாவனைக்குப் பொருத்தமற்றது என உணவு மற்றும் மருந்துப் பரிசோதகர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

நாட்டுக்கு கொண்டுவரப்படும் அரிசி சுங்கத்திலிருந்து விடுவிக்கப்படுவதற்கு முன்னர் சுகாதார அமைச்சின் உணவு மற்றும் மருந்து பரிசோதகர்களால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. இந்தச் சோதனைகளின்போதே பாவனைக்கு உதவாதஅரிசிகண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அவற்றில்இரண்டுகொள்கலன்களில் உள்ள அரிசியில் வண்டுகள் இருந்தன எனவும், மற்றைய கொள்கலனில் இருந்த அரிசியில் உற்பத்தி திகதி 7

## புதிய சபாநாயகர் பதவிக்கு மூவர் பெயர்கள் பரிசீலிப்பு

புதிய சபாநாயகர் பதவிக்கு ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான நிஹால் கலபத்தி, லக்ஷ்மன் நிபுணராட்சி மற்றும் பிரதி சபாநாயகர் வைத்தியர் மொஹமட் ரிஸ்வி சாலி ஆகியோரின் பெயர்கள் பரிசீலிக்கப்படுகின்றன.

கல்வித் தகைமை தொடர்பில் எழுந்த கடும் சர்ச்சையை தொடர்ந்து அசோக்க ரன்வல சபாநாயகர் பதவியிலிருந்து விலகினார். அவரது பதவி விலகல் ஜனாதிபதியால் 7

## 6 ஆயிரம் கார்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பம்

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் போலியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படும் சுமார் 6,000 கார்கள் இலங்கையில் பயன்பாட்டில் இருப்பதாகத் தெரியவந்திருப்பதை அடுத்து தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அது தொடர்பான விசாரணைகளைத் தொடங்கியுள்ளது.

இந்த வாகனங்கள் சுங்க வரியை செலுத்தாமல் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டவை என்று அதிகாரிகள் கூறுகின்றனனர். 7

## சபாநாயகரின் பதவி விலகல் முன்மாதிரிப் பெருந்தன்மை

### சிறீதரன் எம்.பி. கருத்து

சபாநாயகரின்பதவிவிலகல்பெருந்தன்மையான செயல். அந்த முன்மாதிரிக்காக அவரைப் பாராட்டுகின்றோம்என்றுயாழ். மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்தார்.

வவுனியாவில் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் முடிந்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இதனைத் தெரிவித்தார். யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அருச்சுனா அரச அதிகாரிகளுடன் முரண்பட்ட விடயம் தொடர்பாகக் கருத்துத்தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

நாடாளுமன்ற அருச்சுனாவின் செயற்பாடுகளை எவ்வாறு பார்க்கின்றீர்கள் என்று சிறீதரனிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளித்தநாடாளுமன்றஉறுப்பினர்தெரிவித்ததாவது:

அரசு அதிகாரிகளாக இருப்பவர்கள் எங்களைவிட கல்வித்தரத்திலே கூடியவர்களாக இருக்கிறார்கள். அறிவுபூர்வமாக படித்துத்தான் அவர்கள் அந்தப் பதவிகளுக்கு வந்திருக்கிறார்கள். 7

## இனி இது .....

கடைசியில் ரணிலுக்கும் வாக்குப்போட்டேன் என்று கட்சியைக் கேவலப்படுத்தியவர் மாவை. அதுமட்டுமல்லாமல் நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் கட்சித் தலைமைப் பதவியில் இருந்து விலகுகின்றேன் என்று அறிவித்துவிட்டு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் போட்டியிட்ட தனது சம்மந்தியான சசிகலாவுக்கு ஆதரவாக தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவாளர்களைத் திருப்ப முயன்றவர். கட்சிக்கு எதிராக இவ்வளவையும் செய்துவிட்டும் நேற்றுக் கூட்டத்திற்கு ஒரு மணி நேரம் தாமதமாக வந்து, கடும் எதிர்ப்புக் காட்டப்பட்டபோதும் வெட்கம், மானம், சூடு, சொரணை ஏதுமின்றி தலைமைக் கதிரையில் அமர்ந்தார்.

இதனால் சூடாகிய கூட்டம் தொடர்ந்து ஐந்தரை மணி நேரமாக அவரது தலைமை குறித்துமட்டுமே காரசாரமாகக் கருத்துக்களைப் பரிமாறிய பின்னர் எந்த முடிவுகளுமின்றி முடிந்துபோனது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டம் வவுனியாவில் அமைந்துள்ள தனியார் விடுதியில் நேற்று காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4.30 மணிவரை நடைபெற்றது. இந்தக் கூட்டம் யாருடைய தலைமையில் நடைபெறுகின்றதுஎன்றுகுறிப்பிடாதேகட்சியின் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கத்தால் அழைக்கப்பட்டிருந்தது.

கூட்டம் தொடங்கியபோது மாவை வந்திருக்கவில்லை. இதனாலும் அவர் பதவி விலகிவிட்டார் என்று அறிவித்து, அதனைக் ஏற்று முன்னகரப்போவதாகக் கட்சியின் செயலாளர் அவருக்கு ஏற்கனவே அறிவித்துவிட்டார் என்பதாலும் கட்சியின் மூத்த துணைத் தலைவரான சிவஞானம் தலைமையில் கூட்டத்தினை தொடங்கலாம் என்று சிலர் முன்மொழிந்தனர். உடனே ஆவேசமாக எழுந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சிவமோகன் அதனை எதிர்த்தார். மாவையர் வரும் வரை யாரும் கூட்டத்திற்குத் தலைமை தாங்கத் தான் விடமாட்டார் என்று களேபரம் செய்தார். மாவை வந்த பின்னரே கூட்டத்தைத் தொடங்கத் தான் விடுவார் என்று கத்தினார்.

மருத்துவர் சிவமோகனின் கருத்துக்களை மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கடுமையாக எதிர்த்தார். மாவையர் ஏலவே தலைமைப்பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துவிட்டார். அந்த அறிவிப்பு கிடைத்து ஒருமாதத்துக்கு மேலாகிவிட்டது. ஆகவே இனியும் அவருக்காகக் காத்திருக்க முடியாது என்று சாணக்கியனும் பதிலுக்குச் சீறினார்.

இதனால் கொஞ்சம் அடங்கிய சிவமோகன், குறைந்தபட்சம் மாவையருக்கு அழைப்பெடுத்த அவர் வருவாரா மாட்டாரா என்பதைக் கேட்ட பின்னர் கூட்டத்தைத் தொடங்குங்கள் என்றார். எனினும் மத்தியகுழுவொன்றும் தொலைபேசி நிலையம் கிடையாது. அல்லது உங்களது வைத்தியசாலை கிடையாது என்று அதற்கும் சாட்டையைச் சுழற்றினார் சாணக்கியன்.

மத்தியகுழுவின் மற்றொரு உறுப்பினரான பீற்றர் இளஞ்செழியன் கோபமடைந்து, கூட்டத்தினை நடத்தவிடாது குழப்புபவர்களை வெளியேற்றிவிட்டு கூட்டத்தினை நடத்துங்கள் என்று கத்தினார். இந்தத் தர்கங்கள் நடந்துகொண்டிருந்தபோதே, 45நிமிடங்கள் தாமதமாக மாவை கூட்டத்திற்கு வந்து சேர்ந்தார்.

வந்தவர் நேராகக் கூட்டத்தின் தலைமை ஆசனத்தில் அமரச்சென்றபோது சாணக்கியன் அவரைத் தடுத்தார். நீங்கள் பதவி விலகி விட்டீர்கள். இனி தலைமை ஆசனத்தில் அமரமுடியாது என்றார். மாவையர் அதனைப் பொருட்படுத்தவேயில்லை. ஒரு ஜடம் போன்று நடந்துசென்று தலைமைக் கதிரையில் அமர்ந்தார்.

உடனேயே மாவையின் பதவி விலகல் பற்றிய விடயத்தினை பொதுச்செயலாளர் வைத்தியர் சத்தியலிங்கம் சபையில் முன்வைத்தார். மாவையின் பதவி விலகல் கடித்தினை அடுத்து அது குறித்துத் தெளிவுபடுத்துமாறு கேட்டு தான் அனுப்பிய கடிதங்களுக்கு மாவையிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை என்று கூட்டத்தில் எடுத்துரைத்தார்.

அப்போது, மாவை தான் வட்ஸ்அப் மூலமாக பதிலளித்தார் என்று குறிப்பிட்டதோடு கட்சியின் வழக்கு முடியும் வரையில் தலைமைப் பதவியில் தொடர்ந்தும் நீடிக்க விரும்புகிறார் எனவும் கூறினார். எனினும், அவரது வட்ஸ்அப் கடிதத்தினை ஏற்றுக்கொள்ளமுடியுமா, அதற்குச் சட்ட அங்கீகாரம் இருக்கின்றதா என்ற கேள்விகள் எழுப்பபட்டதால் மீண்டும் சர்ச்சை வெடித்தது. ஆளுக்காள் மாறி மாறி கருத்துக்களைத் தூக்கி வீசினார்கள். கூட்டம் மீண்டும் களேபரமானது. ஒரே கூச்சல் குழப்பமானது.

ஈற்றில் வட்ஸ்அப் மூலம் அனுப்பப்படுபவற்றை உத்தியோகபூர்வமான பதிலாக கட்சி ஏற்றுக்கொள்வது என்று முடிவெடுக்கப்பட்டது. எனினும், மாவையின் பதில் வட்ஸ்அப்பில்கூடக் கிடைக்கத் தாமதமாகியதால் அதனை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று சாணக்கியன், இரத்தினவேல், இளஞ்செழியன், சயந்தன் போன்றவர்கள் வாதாடினர்.

அதனால் மீண்டும் தர்க்கம் ஏற்பட்டது. சர்ச்சை வெடித்தது. கூச்சலும் குழப்பமும் மிகுந்தது. இதனையடுத்து புதிய தலைமையை முன்மொழிந்து வாக்கெடுப்பை நடத்துவோம் என்று ஒரு சாரார் கூறினர். சிவஞானத்தைத் தான் தலைவராக முன்மொழிகிறார் என்று சாணக்கியன் கூறவும் இளஞ்செழியன் அதனை வழிமொழிந்தார்.

இந்தச்சமயத்தில் எழுந்த சிறிதரன், வழக்கு முடியும் வரையில் மாவை தான் தலைவராக இருக்கவேண்டும் என்று வாதிட்டார். அத்துடன், தேர்தல் முடிவுகளில் ஏற்பட்ட வாங்குவங்கிச் சரிவைச் சுட்டிக்காட்டி அதனைப்பற்றி உரையாடுவதை விடுத்து மாவையின் தலைமையைக் கேள்விக்குள்ளாக்குவது சரியில்லை என்றார்.

மேலும், தான் மாவையை தலைவர் பதவிக்கு மீண்டும் முன்மொழிகிறார் என்று கூறினார். அதனை யோகேஸ்வரன் வழிமொழிந்தார். சிவமோகனும் அதனை ஆதரித்து கருத்துக்களை வெளியிட்டார்.

இவ்வாறு இரண்டு தரப்பில் முன்மொழிவுகள் செய்யப்பட்டதால் வாக்கெடுப்புக்குச் செல்வதென்று யோசனை முன்வைக்கப்பட்டது. எனினும் குறித்த மத்தியகுழுக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் தலைமைப்பதவித்தெரிவுக்கான நிகழ்ச்சிநிரல் உள்ளடக்கப்படாமையால் அச்செயற்பாட்டை முன்னெடுக்க முடியாது என்று பலரும் சுட்டிக்காட்டினார்கள்.

இதனையடுத்து, நேற்றிலிருந்து 14நாட்களின் பின்னர் மீண்டும் மத்தியகுழுவைக் கூட்டி தலைமைத் தெரிவுக்கான வாக்கெடுப்பைச் செய்வதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு நடுவில் தான் கட்சிக்காகச் சிறை சென்றது முதல், கட்சிக்காக அதைச் செய்தேன் இதைச் செய்தேன், அப்படிச் செய்தேன், இப்படிச் செய்தேன் என்று மாவையர் தனது மணிக்கணக்கான அறுவை உரையை ஆற்றவும் தவறவில்லை. அவரது பேச்சு முழுவதும் இன்னும் கொஞ்சக் காலத்திற்கு இந்தத் தலைமைக் கதிரையில் என்னைத் தொடரவிடுங்கள் என்று காலில் வி-ழுந்து கெஞ்சாத குறையாகத்தான் இருந்தது. இந்தப் பரிதாபத்தைப் பார்த்த மூத்த வயதான உறுப்பினர்கள் சிலர்கூட, பாவம் மாவையர் ஏதோ கடைசிக் காலம் என்று பரிதாபப்பட்டு சரி அவரே இருந்துவிட்டுப் போகட்டும் என்று தமது முடிவை மாற்றும் அளவிற்கு மாவையரின் உருக்கமான சொற் பிழிவு இருந்தது.

ஆனால், கட்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லவேண்டும், மீண்டும் கட்சி மக்களிடம் இழந்த செல்வாக்கைப் மீளப் பெறவேண்டும் என்று விரும்பியவர்கள் மாவையர் தனது பதவியை மதிப்போடு விலகிக் கொடுக்கவேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் கல்லுளிமங்கனாக மாவையர் தலைமையில் விடாப்பிடியாக இருந்தார். ஒரு கட்டத்தில் ''இப்படி இருப்பதும் இரந்து கேட்பதும் உங்களுடைய மதிப்புக்குத்தான் இழுக்கு, விலகிவிடுங்கள் அப்பா'' என்று மகன் கலையமுதன் கூறியதையும்கூட காதில் போட்டுக்கொள்ளவில்லை மாவையர் கதிரையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டே அமர்ந்திருந்தார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

# முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக்கு ரூ. 1100 மில்.

## ரூ. 326 மில்லியன் மகிந்தவுக்கு மட்டும்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக் குறைக்கப்பட்டுள்ளதாகக் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுவரும் நிலையில், அவரது பாதுகாப்புக்காக மட்டும் வருடம் ஒன்றுக்கு 326 மில்லியன் ரூபாய் செலவிடப்படுவதாக ஆளும்தரப்பு தெரிவித்துள்ளது. முன்னாள் ஜனாதிபதிகள் அனைவரின் பாதுகாப்புக்காக மட்டும் ஒவ்வொரு வருடமும் 1,100 மில்லியன் ரூ-பாய் செலவிடப்படுகின்றது என்று முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு கண்டறிந்துள்ளது.

இந்நிலையில் செலவினத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரில் 116 பேர் பொலிஸ் கடமைகளுக்காக திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இருப்பினும் அவரது பாதுகாப்புக்காக இன்னமும் 60 பொலிஸார் வழங்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை எதிர்காலத்தில் அதிகரிப்பதா அல்லது குறைப்பதா என்பது தொடர்பில் மீள ஆராயப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி புத்திக மனதுங்க தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. இந்த குழுவினால் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு மற்றும் வசதிகள் தொடர்பாக ஆராய்ந்தது. இதற்காக ஒதுக்கப்படும் நிதி தொடர்பிலும் கணக்கிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக மட்டும் வருடமொன்றுக்கு 1100 மில்லியன் ரூபாய் நிதி செலவிடப்படுவதாகவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு மாத்திரம் அதில் 326 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் சேவையில் 24 ஆயிரம் பதவி வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் இதற்கு முன்னர் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு மற்றும் பிரதமர் பாதுகாப்பு பிரிவுகளில் கடமையாற்றிய 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொலிஸார் தமது வழக்கமான பணிகளுக்குத் திருப்பப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி புத்திக மனதுங்க தெரிவித்தார்.

## தமிழ் அரசுக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தான் விலகுகிறார் என்று மாவை சேனாதிராசா அறிவித்திருந்த நிலையிலும் அதனை ஏற்றுக்கொண்டு மேற்கொண்டு நகர்வதாக கட்சியில் செயலாளர் அவருக்கு அறிவித்திருந்த நிலையில் இந்தக் கூட்டத்தை கட்சியின் மூத்த துணைத் தலைவர் சிவஞானத்தின் தலைமையில் நடத்துவதற்கு நேற்று முயற்சி எடுக்கப்பட்டது. அந்த நேரத்தில் மாவை சேனாதிராசா அங்கு வருகை தந்ததைத் தொடர்ந்து யார் தலைமை தாங்குவது என்பது தொடர்பில் தலைமைக் குழுவிற்குள் வாதப் பிரதிவாதங்கள் எழுந்தன.

இதையடுத்து பதவி விலகிய மாவை சேனாதிராசா அந்தப் பதவியில் தொடர முடியாது என்று ஒரு தரப்பினர் சிவஞானத்தை கட்சித் தலைவராக முன்மொழிந்து வழிமொழிந்தனர். பதிலுக்கு மாவை சேனாதிராசாவை மற்றொரு தரப்பினர் முன்மொழிந்து வழிமொழிந்தனர். எனினும் நேற்றைய கூட்ட நிகழ்ச்சி நிரலில் தலைவர் பதவிக்கான தேர்தல் நடத்தப்படும் என்று குறிப்பிடப்படாத காரணத்தால் வாக்கெடுப்பு நடத்தப்படவில்லை. பதிலாக 14 நாட்களின் பின்னர் மத்திய செயற்குழுவைக் கூட்டி அதனை முடிவு செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

நேற்றைய கூட்டம் தொடர்பாக கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் தெரிவித்ததாவது:

கூட்டத்திற்கு தலைமைதாங்குவது யார் என்ற கேள்வி எழுந்தது. மாவை சேனாதிராசா கடந்த ஒக்டோபர் மாதத்திலே தனது பதவியிலிருந்து விலகியிருந்தார். அதன்பிறகு இடம்பெற்ற அரசியல் குழுக் கூட்டத்தில் அது தொடர்பாக பொதுச்செயலாளர் அவரிடம் தெளிவுபடுத்துமாறு கோரியிருந்தார். அவர் பதில் எதுவும் தெரிவிக்கவில்லை. அதன் பின்னர் அவரது பதவி விலகல் குறித்துத் தெளிவுபடுத்தும்படி கேட்டுக் கடிதமும் அனுப்பியிருந்தார். அதற்கும் அவர் பதில் அளித்திருக்கவில்லை. இதனால் அவரது பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டு அடுத்த கட்டத்திற்கு கட்சி நகர்கின்றது என்று அவருக்கு அறிவித்திருந்தார்.

அந்தக் கடிதம் கிடைத்த பின்னர், அந்தக் கடிதத்திற்கு முன்னைய திகதியிடப்பட்ட ஒரு கடிதத்தை அவர் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கு அனுப்பியிருந்தார். அதில் தனது பதவி விலகல் கடிதத்தைத் தான் மீளப்பெறுகிறார் என்று தெரிவித்திருந்தார். அந்தக் கடிதத்தின் பிரதியை சிறீதரன் கட்சியின் செயலாளருக்கு அனுப்பியிருந்தார்.

கட்சித்தலைமையில் இருந்து சேனாதிராசா விலகியை கட்சி ஏற்றுக்கொண்டிருப்பதால் கட்சியின் அடுத்த மகாநாடு வரைக்கும் ஒருவரைத் தலைவராக நியமிக்க இன்றைய கூட்டத்தில் முன்மொழியப்பட்டது. தலைவர் ஒருவர் பதவி விலகினால் எஞ்சியிருக்கிற காலத்துக்கு மத்திய செயற்குழு ஒருவரை தலைவராக நியமிக்க முடியும் என்ற எமது யாப்பின் அடிப்படையில் சிவஞானத்தை அந்த பதவிக்கு நியமிக்குமாறு முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டது.

இதேவேளை சேனாதிராசா தனது பதவி விலகல் கடிதத்தைத் திரும்பப் பெற்றிருக்கிறார் என்ற காரணத்தினால் அவர் தொடர்ந்து இருக்கவேண்டும் என்ற மாற்று முன்மொழிவும் சொல்லப்பட்டது. இதனால் குறித்த விடயம் தொடர்பாக நீண்ட விவாதம் நடைபெற்றது.

இந்த விடயத்தை வாக்கெடுப்பிற்கு விடும்படியாக அவரது பதவி விலகலை ஏற்றுக்கொண்ட தரப்பினர் கேட்டுக்கொண்டனர். ஆனால் வாக்கெடுப்புக்காக இன்னொரு கூட்டத்தைக் கூட்டுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் தலைவர் யார் என்று தெரியாத ஒரு நிலையிலேதான் அடுத்த கூட்டம் வரைக்கும் கட்சி பயணிக்க வேண்டிய நிலையில் இருக்கிறது என்றார்.

## யாரையும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் பேச்சாளர் என அந்தக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தின் பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றைய கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் பல விடயங்கள் இருந்தன. ஆனாலும் ஒரு விடயம் ஆராயப்பட்டது. தமிழ் அரசுக் கட்சித் தலைவரின் பதவி விலகல் கடிதம் தொடர்பாக வாதப் பிரதி வாதங்கள் இடம்பெற்றன. அந்தக் கடிதத்தை மாவை சேனாதராசா அனுப்பியதன் பின்னர் அதனைத் திரும்பப் பெறுகிறார் என்றும் சொல்லியிருந்தார். மீண்டும் தலைவராக இருப்பதற்கான சம்மதத்தையும் தெரிவித்திருந்தார். அது தொடர்பாக எமது கட்சி உறுப்பினர்கள் மத்தியில் இரண்டு கருத்துக்கள் இருந்தன. அதன் அடிப்படையில் அவர் பதவி வகிக்கவேண்டும் என்ற ஒரு கருத்தும், கடிதம் கொடுத்தன் பிரகாரம் பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற ஒரு கருத்தும் இருந்தது.

ஒரு ஜனநாயக கட்சி என்ற அடிப்படையில் அந்த வாதப் பிரதி வாதங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. தீர்க்கமான முடிவு எடுக்க முடியாத நிலையில் பதவி விலகளை உடனடியாக ஏற்றுக் கொள்ளவில்லை. டிசெம்பர் 28 வரை இந்த விவகாரம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மீண்டும் கூட்டம் ஒன்றை கூட்டி தலைவர் யார் என்று முடிவெடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேர்தலில ஏற்பட்ட பின்னடைவு குறித்தும் கூட்டத்தில் ஆராயப்பட்டது. குறிப்பாக வடக்கு மாகாணத்தில் ஏற்பட்ட பின்னடைவு பற்றிப் பேசப்பட்டது. இதற்கு தலைவர் சேனாதிராசாவின் பதவி விலகல் ஒரு காரணம் என்று சொல்லப்பட்டாலும் இன்னும் பல காரணங்களும் இருந்தன. அதனை சுயாதீனமான, நடு நிலமையான ஆய்வு குழு மூலம் ஆராய்ந்து அறிக்கைப்படுத்திய பின்னர்தான் கருத்து கூற முடியும். ஒவ்வொருவரது கருத்துகளும் சுயம் சார்ந்து இருக்கின்றன. ஆய்வுக் குழு மூலம் அதனை மேறகொண்டால் அது பயன் உள்ளதாக அமையும்.

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளராக குணநாதன் நியமனம்

(அபு அலா)

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் புதிய செயலாளராக இலங்கை நிர்வாக சேவை விசேட தர உத்தியோகத்தர் கே.குணநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான கடிதத்தை கடந்த 11 ஆம் திகதி கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகர வழங்கி வைத்தார்.

யாழ் தெல்லிப்பழை குமாரசிங்கம் பூலோகேஸ்வரி தம்பதிகளுக்கு 1973 ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி பிறந்த இவர், தனது பாடசாலைக் கல்வியை மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயத்திலும் பின்னர் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கற்றார்.

1995 - 1998 ஆம் ஆண்டுவரை வவுனியா கல்வியியற் கல்லூரியில் தனது ஆசிரியர் பயிற்சியை அதி சிறப்பு சித்தியுடன் முடித்து வெளியேறிய இவர், 1999 - 2003 ஆம் ஆண்டு செப்ரெம்பர் வரை யாழ். கல்வி வலய கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றினார்.

2001 ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் (வணிகம், புவியியல், அரசியல்) விஷேட பட்டப்படிப்பை சிறப்பு தேர்ச்சியுடன் முடித்துவிட்டு 2003 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இலங்கை நிர்வாக சேவைக்குள் உள்நுழைந்து, தனது நிர்வாக சேவைப் பணியை இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்தில் முன்னெடுத்துச் செயற்பட்டார்.

2004 ஆம் ஆண்டு நவம்பர் முதல் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் வரை வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக கடமையாற்றி அவர்,

அதேயாண்டு திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நியமனம்பெற்று சுமார் 08 வருடங்கள் உள்ளூராட்சித்துறைக்கு பாரிய பங்களிப்புக்களை வழங்கி வந்த நிலையில், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழுவின் பதில் செயலாளராகவும், உலக வங்கியின் சமூக குடிநீர் வழங்கல் செயற்றிட்டத்தின் திருகோணமலை மாவட்ட மேற்பார்வை மதிப்பீட்டு அதிகாரியாகவும், பதில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகவும் 2009 ஆம் ஆண்டுவரை கடமையாற்றினார்.

2010 ஆம் ஆண்டு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைகழகத்தில் பொது நிர்வாக டிப்ளோமா பாடநெறியை முடித்த அவர், அதே பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்துறையில் முதுமாணிப்பட்டத்தையும் 2012 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டார்.



இந்தக் காலப்பகுதியில் 2010 - 2013 வரை உலக வங்கியின் அனுசரணையில் நடைமுறைப்படுத்தப்பட்ட புறநெகும ஃ நெல்சிப் திட்டத்தில் மாவட்ட திட்டப் பணிப்பாளராகவும், ஜெய்க்கா ஜப்பான் நிதி அனுசரணையில் நடைமுறைப்படுத்தப்பட்ட கிராமிய குடிநீர் விநியோகத்திட்டத்தில் மாவட்ட திட்ட முகாமையாளராகவும் செயற்பட்டார்.

2013 - 2015 ஆண்டு வரை கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளராகவும், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் பதில் செயலாளராகவும் கடமையாற்றினார்.

2015 - 2017 ஆம் ஆண்டு வரை கிழக்கு மாகாண கிராமிய தொழிற்துறை திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளராகவும், 2017 - 2018 ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலாளராகவும், 2018 - 2021 ஆம் ஆண்டு வரை திருகோணமலை வெருகல் பிரதேச செயலாளராகவும், 2022 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த நியமனம் பெறும்வரை திருகோணமலை குச்சவெளிப் பிரதேச செயலாளராகவும் கடமையாற்றினார்.

கனடா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, தென்கொரியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இடம்பெற்ற சர்வதேச மாநாடுகளிலும், எமது நாட்டிலும் இடம்பெற்ற சிறப்பு பயிற்சிகளில் பங்கு பற்றி அதன் மூலம் பெற்றுக்கொண்ட அனுபவத்தின் மூலம் எமது நாட்டின் உள்ளூராட்சி மன்றங்களின் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான சிறப்புத் தேர்ச்சிமிக்க வளவாளராகவும் செயற்பட்டு வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனம், இலங்கை உள்ளூராட்சி நிறுவகம், மாகாண முகாமைத்துவ பயிற்சித் திணைக்களம், உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு, ஆசியா மன்றம், கொமன்வெல்த் உள்ளூராட்சி அமையம் உள்ளிட்ட பல்வேறு தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களின் செயற்றிட்ட ஆலோசகராகவும், திட்ட வளவாளராகவும் இற்றை வரை செயற்பட்டு வருகின்ற சிறந்த நிர்வாக அதிகாரியாக இருந்தும் வருகின்றார்.

# வவுனியாவில் தேன் எனக்கூறி சீனிப்பாணி விற்ற மூவர் கைது

வவுனியாவில் சீனிப் பாணியை தயாரித்து தேன் எனக் கூறி விற்பனை செய்து வந்த மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடமிருந்து பெருமளவான சீனிப்பாணியும் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் வவுனியா பொதுச் சுகாதார பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்பார்வை சுகாரதார பரிசோதகர் மேஜயாவின் வழிகாட்டலில், நெளுக்குளம் பொது சுகாதார பரிசேதகர் சிவரஞ்சன் தலைமையில், ஓமந்தை பொது சுகாதார பரிசேதகர் விதுசன், கந்தபுரம் பொது சுகாதார பரிசேதகர் ஞானபிரஹாஸ், பூவரசங்குளம் பொது சுகாதார பரிசேதகர் கிசோகாந் ஆகிய அணியினர் மற்றும் நெளுக்குளம் பொலிஸார் இணைந்து ஊர்மிளாக்கோட்டம் பகுதியிலுள்ள வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது குறித்த இடங்களில் விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டிருந்த 200 போத்தல் சீனிப் பாணி சுகாதாரப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் மூன்று பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

இதேவேளை, சீனிப்பாணியை தயாரித்து அதற்குள் சிறிதளவு தேனை மாத்திரம் கலந்து ஏ-9 வீதியின் முறிகண்டிப் பகுதியிலும், நெடுங்கேணி பகுதிகளிலும் விற்பனை செய்யப்படுகிறது. அத்துடன் இங்கிருந்து அனுராதபுரம், மதவாச்சி ஆகிய பகுதிகளுக்கும் அவை கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.

இது உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கின்றது. எனவே, பொதுமக்கள் தேனை கொள்வனவு செய்யும் போது சரியான முறையில் உறுதிப்படுத்தி அவற்றை கொள்வனவு செய்யுமாறு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர். 100



# கஞ்சாவுடன் கைதானவர்கள் பொலிஸ் தடுப்புக் காவலில்

## யாழில் அதிரடி

யாழ்ப்பாணத்தில் கஞ்சா போதைப்பொருளுடன் கைதான இருவரையும் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற பதில் நீதவான் ஷாலினி ஜெயபாலச்சத்திரன் அனுமதித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - காரைநகர் கசூரினா கடற்கரைக்கு அண்மித்த பகுதியில் வியாழக்கிழமை காலை எரிபொருள் முடிவடைந்த நிலையில் படகொன்று கரையொதுங்கியுள்ளது.

படகு சந்தேகத்துக்கு இடமான முறையில் காணப்பட்டமையால் அதனை புலனாய்வாளர்கள் சோதனையிட்டபோது, 92 பொதிகளில் 213.899 கிலோ கிராம் கேரள கஞ்சா படகினுள் காணப்பட்டது.

அதனையடுத்து, படகில் வந்த இருவரையும் கைது செய்து, படகில் மீட்கப்பட்ட கஞ்சா பொதிகளையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைத்த நிலையில், கைது செய்யப்பட்ட இருவரையும் வியாழக்கிழமை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் பொலிஸார் முற்படுத்தினர்.

அதன்போது, சந்தேக நபர்களிடம் தொடர் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளதால், அவர்களை பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதி வேண்டும் என பொலிஸார் விண்ணப்பம் செய்தனர். பொலிஸாரின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட பதில் நீதிவான் இருவரையும் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்கினார்.

# கசிப்பு உற்பத்தி செய்த சந்தேகநபர் மாட்டினார்

கிளிநொச்சி பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரியகுளம்கட்டைக்காட்டு தருமபுர பொலீஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக வெள்ளிக்கிழமை சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 27 லிற்றர் கசிப்பும் 120 லிற்றர் கோடாவும் மற்றும் காசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள்என்பவற்றைபொலீஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் தடையப் பொருள்கள் அனைத்தும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தர்மபுர பொலீஸார் தெரிவித்துள்ளனர். 113

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


# பதவியிலிருந்து விலகுவதே சேனாதிராசாவுக்கு மதிப்பு

ஓர் அரசியல் கட்சியின் தலைவர் நெருக்கடியான நேரங்களில் கட்சிக்குச் சரியான தலைமைத்துவத்தை வழங்குபவராக இருக்கவேண்டும். எத்தகைய நெருக்கடிகள் வரினும் அதனை எதிர்த்து நின்று கட்சியை வழிநடத்துபவராக இருக்கவேண்டும். அது –முடியாதபோது பதவி விலகி அடுத்தவர்களுக்கு வழிவிடவேண்டும். அதுவே மக்களாட்சிப் பண்பு. அப்படிப்பட்ட பண்பியல்பைக் கொண்ட தலைவரே மக்கள் கூட்டத்தை வழிப்படுத்தும் ஆளுமை கொண்டவராக இருப்பார். எப்படியாவது தலைமை இருக்கையைத் தக்கவைத்துக்கொள்வோம் என்று நினைப்பது தலைமைத்துவ ஆளுமையும் அல்ல, வரவேற்கத்தக்க உட்கட்சி ஜனநாயகமும் அல்ல.

தமிழ் அரசுக் கட்சியின் நேற்றைய மத்திய குழுவில் அதன் முன்னாள் தலைவர் மாவை. சேனாதிராசா நடந்துகொண்ட விதம் அவர் இதுவரை கட்சிக்கும் மக்களுக்கும் ஆற்றிய சேவைகளை கேள்விக்குட்படுத்தி, கேவலப்படுத்தும் வகையில் அமைந்திருந்தது. உடல் தளர்ந்து இயலாமையின் பிடியில் சிக்கியிருக்கும் மாவை சேனாதிராசா தலைமை இருக்கையை இப்போது யாருக்கும் விட்டுக்கொடுக்க மாட்டேன் என்று நிற்பது உட்கட்சி அரசியல் மற்றும் அவர் விரும்புபவரிடம் கட்சித் தலைமையைக்கையளிக்கும்விருப்பத்தின்அடிப்படையிலானதாக இருக்கலாம். ஆனால், கட்சிக்கு அடுத்த தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் ஒன்றை நடத்தி அதில் தான் போட்டியிடாதிருக்கத் தீர்மானித்தபோதே சேனாதிராசா தனது தலைமைப் பதவியிலிருந்து விலகிவிட்டார். அதன் பின்னர் கட்சியின் தலைமையைப் பொறுப்பேற்பதென்பது அடுத்த தலைமுறைத் தலைவர்களின் பணி. அவர்களில் ஒருவரை ஆதரிப்பதற்காகத் தன்னைச் சிறுமைப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவை மாவைக்கு இல்லை.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவராகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும் இருந்தவரான சம்பந்தன்கூடச் தனதுகடைசிக்காலத்தில்தலைமைத்துவம்குறித்தகடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டார். இத்தனைக்கும் அவர் தான் நல்ல செயலியகத்தோடு இருக்கும்போதே தமிழ் அரசுக் கட்சியின் தலைமைப் பதவியை மாவை சேனாதிராசாவுக்கு விட்டுக்கொடுத்திருந்தார். அப்படியிருந்தும் இறக்கும் வரை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலக மறுத்தமை மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடைசிக் காலத்தில் அதனைப் பொறுப்பாக, பொருத்தமாக வழிநடத்தத் தவறியமை என்று பல விமர்சனங்களை எதிர்கொண்டார். இப்போது மாவையரோ தலைமையை அடுத்தவர்களிடம் கையளிக்கத் தவறுவதன் மூலம் கடுமையான விமர்சனங்களைக் கட்சிக்குள்ளும் வெளியிலும் எதிர்கொள்ளகிறார்.

அப்படியிருந்தும் தலைமைப் பதவியை மற்றவர்களிடம் கையளித்து வெளியிலிருந்து கட்சியை வழிநடத்தும் ஆலோசனைகளை வழங்கும் வகிபாகத்திற்கு முன்னேற அவர் நேற்றைய மத்திய குழுக் கூட்டத்தில் மறுத்திருப்பது கண்டனத்திற்கும் வேதனைக்கும் உரியதாகின்றது. கட்சிக்காகக் கடந்த காலங்களில் உயரிய பணகளை ஆற்றிய ஒரு தலைவர் இப்படி பதவிக்காக கட்சிக்குள் போராட்டம் நடத்துவதும் குழப்பங்கள் விளைவிப்பதும் கட்சித் தீர்மானங்களுக்கு மாற்றாகத் தானே செயற்பட்டுவிட்டு அதனை நியாயப்படுத்திக் கட்சியைப்பலவீனம்படுத்துவதும் உண்மையிலேயே பார்ப்பதற்குச் சகித்துக்கொள்ளக் கூடியதாக இல்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாக்கப்பட்ட பின்னரும் தமிழ் அரசுக் கட்சி தவறாகப் பயன்படுத்தப்படாமல் பாதுகாத்தது முதல் தொடர்ந்தும் கட்சியை உயிர்ப்போடு வைத்திருந்தது வரை இன்று அந்தக் கட்சியின் முவரியாகச் செயற்பட்டு வந்திருந்தவர் மாவை சேனாதிராசா என்பதை மறுப்பதற்கில்லை. அவரது பணிகளை எவரும் குறைமதிப்பீடும் செய்துவிடமுடியாது. அவர் கட்சிக்கும் மக்களுக்கும் ஆற்றிய பணிகள், சிறைக்குச் சென்றமை என்பவற்றின் மூலம் அவர் பெற்றிருக்கும் மரியாதையையும் மதிப்பையும் யாரும் அவரிடமிருந்து பிடுங்கிவிடவும் முடியாது. எத்தனை உன்னதமானவர்களாக இருந்தாலும் எல்லாத் தலைவர்களுக்கும்ஒருமுடிவுஇருக்கின்றதுஎன்றயதார்த்தையும் அவர் புரிந்தகொள்ளவேண்டும். அந்தத் தருணம் வரும்போது தாமாகவே அடுத்தவர்களிடம் கட்சியைக் கையளித்துவிடுவதே சிறந்த தலைவருக்கு அழகு. மாவை சேனாதிராசா அந்த இடத்தை நோக்கி முன்னேறவேண்டும். கட்சிக்குள்ளும் அரசியலிலும் தனது காலம் முடிவுக்கு வந்துவிட்டது என்கிற யதார்த்தத்தை அவர் புரிந்துகொண்டு விலகுவதே சிறந்தது.

# தமிழ் அரசு பிரதேசசபை வேட்பாளர்களுடன் கிளிநொச்சியில் சிறிதரன் எம்.பி. சந்திப்பு





தமிழ் அரசுக் கட்சி சார்பாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள மூன்று பிரதேச சபைகளில் போட்டியிடுவதற்காக வேட்பு மனு தாக்கல் செய்தவர்கள் மற்றும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் இலங்கை தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சி அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெற்றது.

தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் -

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் இளைஞர்கள் மற்றும் பெண்கள் புதியவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கவுள்ளதாகவும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் தனித்து போட்டியிட்டு தேசியத்துடன் பயணிக்கும் தமிழ்க் கட்சிகளோடு ஆட்சியமைப்பதே நோக்கம் எனினும் மற்றும் சபாநாயகர் பதவி விலகல் தொடர்பாகவும் கருத்து தெரிவித்தார். 113

# சுதந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டில் கருத்துக்களை உள்வாங்கும் செயலமர்வு



முப்பது வருட யுத்தத்தில் எதிர்நோக்கிய மனித உரிமைகள் மீறல்கள் யுத்தம் முடிந்து எதிர்நோக்கும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சிவில் அமைப்புக்கள் ஊடகவியலாளர்களின் கருத்துக்களை உள்வாங்கும் செயலமர்வு சுகந்திர ஊடக இயக்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சில் தனியார் விருந்தகத்தில் இடம்பெற்றது. 113





# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக அரசு நீக்கவேண்டும்

## கிழக்கு பெண் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் வலியுறுத்து

(ஹஸ்பர்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் எனவும் முன்னால் போராளிகளை புலனாய்வாளர்கள் அச்சுறுத்துவதையும் உடன் நிறுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிழக்கு மாகாண பெண் மனித உரிமைகள் அமைப்பைச் சேர்ந்த பெண் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

திருகோணமலையில் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்தும் அவர்கள் தெரிவிக்கையில் -

இலங்கை அரசு ஒப்புதல் அளித்து ஏற்றுக்கொண்ட சீடோ சமவாயம் இதனை சட்ட மூலமாக உருவாக்க வேண்டும். வடக்கு கிழக்கில் பெண் செயற்பாட்டாளர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஊடாக பாரிய அச்சுறுத்தல்களை சந்திக்கின்றனர். பெண்கள் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் உடல் உள பாலியல், இணைய வன்முறை என பல சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர். இதனை நிறுத்தி கடுமையான சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் .

குறிப்பாக பெண் மனித உரிமை செயற்பாட்டாளருள் ஒருவரான நவரத்ணம் அஞ்சலி தேவி (வயது 61) டிசெம்பர் 04 ஆம் திகதி பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் விசாரிக்கப்பட்டார். அதேவேளை டிசெம்பர் 11 ஆம் திகதி 11 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட நபருக்கு எதிரான தீர்ப்பு வரவேற்கத்தக்கது.

சட்டங்களை கடுமையாக அமுல்படுத்தி இவ்வாறான தீர்ப்புக்கள் வரவேற்கத்தக்கது இதனை வலியுறுத்தியே அரசாங்கத்துக்கு கோரிக்கையாக முன்வைக்கிறோம். - என்றனர்.

# ரஷ்ய ஆளும்தரப்பினால் விவசாயிகளுக்கு உரம்

இலங்கை விவசாயிகளுக்கு வழங்கப்படுவதற்காக வியாழக்கிழமை கையளிக்கப்பட்ட 55 ஆயிரம் மெற்றிக்தொன் எம்.ஓ.பி.உரம் கிளிநொச்சி விவசாயிகளுக்கும் வழங்குவதற்காக மாவட்டத்திலுள்ள பூநகரி, கிளிநொச்சி, கண்டாவளை கமநல சேவை நிலையங்களுக்கு வெள்ளிக்கிழமை கொண்டு வரப்பட்டன.

விரைவாக விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் பா.தேவரதன் தெரிவித்தார். 113










# மக்கள் பிரச்சினைகளைக் கேட்டறிந்த திருமலை எம்.பி சண்முகம் குகதாசன்

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் கடந்த வியாழக்கிழமை மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள எல்லைக் கிராமங்களாகிய புளியடிச்சோலை, கங்குவேலி ஆகிய கிராமங்களுக்கு களப்பயணம் ஒன்றினை மேற்கொண்டார்.

இந்தப்பயணத்தின்போது மேற்படி கிராமங்களில்வாழுகின்ற மக்களை சந்தித்து அவர்கள் எதிர்நோக்குகின்ற குறுங்கால, நீண்ட கால சிக்கல்கள் பற்றி கலந்துரையாடியதோடு அவற்றைத் தீர்க்க தன்னாலான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார்.







# வவுனியா முருகன் ஆலயங்களில் குமராலாய தீபம் ஏற்றி வழிபாடு

வவுனியாவில் முருகன் ஆலயங்களில் வெள்ளிக்கிழமை மாலை குமராலாய தீபம் ஏற்றி விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

கார்த்திகை மாதத்தில் வருகின்ற கார்த்திகை நாள் ஏனைய கார்த்திகை நாள்களை விடவும் விமரிசையாகத் தமிழர்களால் கொண்டாடப்பட்டு வருகின்ற ஒரு விழா. மாலைவேளையில் வீடுகளின் வெளிப்புறங்களிலும், வீட்டு முற்றத்திலும் விளக்கேற்றிக் கொண்டாடுவார்கள். திருக்கார்த்திகை தினத்தன்று ஆலயங்களில் தீபத்திருவிழா நடைபெறும். கார்த்திகை விழாவை குமராலாய தீபம், சர்வாலய தீபம், விஷ்ணுவாலய தீபம் என மூன்றாக ஆலயங்களிலும் வீடுகளிலும் கொண்டாடுவர்.

அந்தவகையில் நேற்று கார்த்திகை தீபம் ஏற்றப்பட்ட நிலையில் குமராலாய தீபம் இந்து சமய முறைப்படி வெள்ளிக்கிழமை ஏற்றி வைக்கப்பட்டது. வவுனியாவில் உள்ள பல முருகன் ஆலயங்களில் இவ் குமராலய தீபம் சிறப்பாக கொண்டாடப்பட்டது.


குறிப்பாக வவுனியா கந்தசுவாமி ஆலயத்தில் சிவசிறி பிரபாகரக் குருக்கள் தலைமையில் பல நூற்றுக்கணக்கான பக்தர்களின் வழிபாட்டுக்கு மத்தியில் விசேட அபிடேக, பூஜை வழிபாடுகளின் பின் குமாரராலய தீபம் ஏற்றப்பட்டது. ஆலயத்தின் முன்பாக அலங்கரிக்கப்பட்ட சொக்கப்பானையில்தீபம்ஏற்றிவழிபட்டனர். இதனைத் தொடர்ந்து சாமி வெளி வீதி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். 100











# இலவச ஆயுர்வேத வைத்திய முகாம் சம்மாந்துறையில்

(சர்ஜுன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் இலவச ஆயுர்வேத வைத்திய முகாம் கடந்த வியாழக்கிழமை சம்மாந்துறை பிரதேச செயலக சுதேச வைத்திய சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.டி.ஷம்ஷத் தலைமையில் விளினையடி-01 கிராம சேவகர் பிரிவில் மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது.

சுகாதார அமைச்சின் சுதேச வைத்தியப் பிரிவின் நிதி ஒதுக்கீடின் மூலம் இடம்பெற்ற இவ் வைத்திய முகாமில் பாரம்பரிய வைத்தியர் எம். ஏ. ஆரிபா உம்மாவின் வைத்திய மாணவர்கள் எம்.எஸ்.எம்.நபீஸ், எம்.நஜீம், எம்.நளீம் ஆகியோரால் இலவச வைத்திய சேவை முகாம் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனீபாவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் இடம்பெற்ற இவ் வைத்திய முகாமுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் இந்த நிகழ்வுக்கு சம்மாந்துறை ஆயுர்வேத பாதுகாப்பு சபைத் தலைவர் டாக்டர் ஏ.எல்.எம் மஜீட், செயலாளர் டாக்டர் எம்.சீ.எம் காலீத், பொருளாளர் வைத்திய மாணவன் ஏ.எல்.எம் நஹீம் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர் Kalaikkathir

## யாரையும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் அரசுக் கட்சித் தலைவர் விடயம் முக்கியம் பெற்று இருந்தமையால் வேறு விடயங்கள் குறித்து இன்று பேச முடியாது போனது. இதற்குவிரைவில்முடிவுஎடுத்துவிட்டு தமிழ் மக்களது பிரச்சினைகள் குறித்து பேச வேண்யுளளது.

கடந்த தேர்தலில் கட்சிகளில் இருந்து விலகி வேறு அணிகளில் தோதலில் போட்டியிட்டவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்ற ஒரு கருத்தும் பேசப்பட்டது. சிலரது கருத்து அவர்களைக் கட்சி அங்கத்தவர் பட்டியலில் இருந்து நீக்கி விடவேண்டும் என்பதாக இருந்தது. இருந்தாலும் அந்தக் கருத்துஏகமனதானகருத்தாகஇருக்கவில்லை. அதிருப்தியின் காரணமாக வெளியேறிச் சென்றவர்களும் இருக்கிறார்கள். அந்த அதிருப்திகளுக்கு என்ன காரணம் என்றும் ஆராய வேண்டியுள்ளது. ஆய்வுக் குழுவின் மூலம் முறையாக ஆய்வு செய்ய வேண்டும். அதன் பின்பே முடிவு எடுக்கப்படும்.

அத்துடன், கட்சியின் நாடாளுமன்றக் குழுவில் என்னைப் பேச்சாளராக அறிவித்துள்ளார்கள். அதனால்எமதுகட்சியின் கருத்தியல் பற்றி நானே சொல்லவேண்டியுள்ளது. அதனைநான்செய்கின்றேன். கட்சிக் கூட்டக் கருத்துக்களையும், நாடாளுமன்றக் கருத்துக்களையும்வெளியிடுவதுஎன்னுடைய பணியாக இருக்கும் எனத் தெரிவித்தார்

## கஜேந்திரகுமாரின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்து செயற்பட முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவை மற்றும் கஜேந்திரகுமார் ஆகிய பெயர்களைக் குறிப்பிடவில்லையாயினும் அதனை முன்வைத்தே சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

"எங்களுடைய கட்சிக்குப் போட்டியாக வேண்டுமென்றே வெவ்வேறு வரைவுகளைச் செய்து சிலர் குழப்பங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அவ்வாறு அந்தக் காலப்பகுதியில் குழப்பங்களைச் செய்தவர்களோடுஅவர்களுடையவரைவுக்கு இணங்கி செல்ல வேண்டிய அவசியம் எமக்குக் கிடையாது" என்றார் அவர்.

தமிழ்அரசுக்கட்சியின்மத்தியசெயற்குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று முடிவடைந்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். தமிழ் மக்கள் பேரவையின் அரசமைப்பு வரைபை முன்வைத்து தமிழ் அரசுக் கட்சியோடு சேர்ந்து பயணிப்பது என்ற கஜேந்திரகுமாரின் முன்மொழிவு குறித்து அவரிடம் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்தகாலத்தில்அரசமைப்புஉருவாக்கம் சம்பந்தமாகத் தமிழ் அரசுக் கட்சி தீர்க்கமான நிலைப்பாடுகளை எடுத்திருக்கின்றது. சில வரைவுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. சில வரைவுகளோடு நாங்கள் இணங்கி இருக்கின்றோம்.

அதனைத் தொடர்ந்து கோத்தபாய ராஜபக்சவினுடையகாலத்தில்அவர் நியமித்த குழுவுக்கு முன்பாகவும் நாங்கள் சென்று எங்களுடைய நிலைப்பாட்டை எழுத்து மூலமாகக் கொடுத்திருக்கிறோம்.

அவையெல்லாம்எங்கள்கட்சியினுடைய நிலைப்பாடு. அந்த நிலைப்பாட்டோடு ஒத்து வருகின்றவர்கள் இருந்தால் சேர்ந்து பயணிப்பதில் எந்த ஆட்சேபனையும் கிடையாது. ஆனால் வேறு சிலர் எங்களுடைய கட்சிக்குப் போட்டியாக வேண்டுமென்றேவெவ்வேறுவரைவுகளைச் செய்து சில குழப்பங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அவ்வாறான குழப்பங்களைச் செய்தவர்களோடுஅவர்களுடையவரைவுக்கு இணங்கிச் செல்ல வேண்டிய அவசியம் நமக்குக் கிடையாது.

தமிழ் அரசுக் கட்சி தமிழர்களுடைய பிரதான கட்சி. வடக்கு கிழக்கில் சகல மாவட்டங்களில் இருந்தும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்திருக்கின்ற ஒரே ஒரு கட்சி இலங்கை தமிழர் கட்சி. எமக்கு மக்கள் கொடுத்த அந்த ஆணையை மீறிச் செயல்பட மாட்டோம். மற்றவர்கள் எங்களோடு, எங்களுடைய நிலைப்பாட்டோடு இணைந்து செயல்படுவதற்கு வருவார்களாயின் எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றார்.

## இறக்குமதியான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடங்கிய பழைய லேபிள்களின் மேல் புதிய லேபிள்ஒட்டப்பட்டிருந்தனஎனவும்அதிகாரிகள் தெரிவித்தனர். அந்தக் கொள்கலன்களை சுங்கத்தில் இருந்து விடுவிக்க சுகாதாரத்துறை அனுமதி வழங்கவில்லை.

அரிசி தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக தற்காலிகமாக 'நாடு' வகை அரிசியை டிசெம்பர் 4 முதல் இறக்குமதி செய்ய ஆளும்தரப்பு தனியார் இறக்குமதியாளர்களுக்கு அனுமதி வழங்கியது.

இந்தியா, பாகிஸ்தானில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. வெள்ளிக்கிழமைபிற்பகல்வரை 2,300 மெற்றிக் தொன் அரிசி கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். அவற்றில் 90 சத வீதமானவை சுங்கத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

## 6 ஆயிரம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த வாகனங்களில் அடையாளம் காணப்பட்ட வாகனங்கள் தொடர்பிலான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்ஆணைக்குழுதெரிவித்துள்ளது.

ஏற்கனவே கைப்பற்றப்பட்ட சில வாகனங்கள் விசாரணைக்காகவும் சுங்க வரிகள் மற்றும் பிற கட்டணங்களை வசூலிப்பதற்காகவும் சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதனால் இந்த வாகனங்களை வாங்கிய இரண்டாவது அல்லது அதற்கடுத்தடுத்த உரிமையாளர்கள் கடுமையானஇன்னல்களுக்குமுகங்கொடுத்து வருகின்றனர்.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக சுங்கத்துறை இணைய தளம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது. இந்த இணையம் ஊடாக ஒருவர் கொள்வனவு செய்ய எதிர்பார்க்கும் வாகனம் சட்டபூர்வமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டு சுங்க வரிகள் முறையாக செலுத்தப்பட்டுள்ளதா என்பதை அறிந்துகொள்ளமுடியும்.

## சிலர் உடனே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

தமிழ்அரசுக்கட்சியின்மத்தியகுழுகூட்டம் நேற்று வவுனியாவில் இடம்பெற்றபின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு மேலும் கருத்து தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத் தேர்தலில் கட்சிக்கு எதிராகப்போட்டியிட்டவர்களை உடனடியாகக் கட்சியிலிருந்து நீக்குவதற்கும் கட்சி வேட்பாளர்களுக்கு எதிராகப் பரப்புரை செய்தவர்களை கட்சியிலிருந்து உடன் இடைநிறுத்துவதற்கும்பொதுச்செயலாளருக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை மத்திய குழு ஏற்றுக் கொண்டிருக்கின்றது. தற்துணிபு அதிகாரத்தின்அடிப்படையில்பொதுச்செயலாளர் எதிர்வரும் நாட்களில் அதனைச் செய்வார்.

இதனடிப்படையில் சிலர் கட்சிக்கும் கட்சியினுடைய வேட்பாளருக்கு எதிராகவும் செயல்பட்டமை தொடர்பிலும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் வரைக்கும் அவர்கள் கட்சியின் செயற்பாடுகளில் இருந்து இடைநிறுத்தப்படுவார்கள் - என்றார்.

## சபாநாயகரின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர்களுக்கும் எங்களை விட ஊடகத்து றையில் அனுபவம் கூடுதலாகவே இருக்கும். ஆகவே என்னைப் பொறுத்த வரைக்கும் நாங்கள் அவர்களை அணுகுவதற்கான முறை இருக்கிறது. மனிதாபிமானத்தையும் மனித மூலதனத்தையும் எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில் நாங்கள் மிகவும் கண்ணியத்தோடும் பொறுப்போடும் நடக்கவேண்டும்.

எங்களுடைய கட்சி இதுவரை காலமும் அவ்வாறுதான் நடந்திருக்கிறது தொடர்ந்தும் அந்த பொறுப்போடும் கண்ணியத்தோடும் அரச உத்தியோத்தர்களோடு அணுகி செயல்படுவோம் - என்றார்.

சபாநாயகரின் பதவி விலகல் குறித்த அவரது கருத்து என்ன என்று அவரிடம் கேட்டதற்கு, சபாநாயகராக இருப்பதற்கு கலாநிதி பட்டமோ தகுதியோ இருக்கவேண்டும் என்று சட்டம் இல்லை. எனினும் அவர் தனது பெயருக்கு முன்பாக கலாநிதி என்ற பட்டத்தைப் பயன்படுத்தி இருக்கிறார். எனினும் அவர் அந்தப் பட்டத்தைப் பெறவிலலை என்று சிலர் அடையாளப்படுத்துவதன் காரணமாக பெருந்தன்மையோடு ஜனநாயக முறைப்படி தனது கட்சியையும் மக்களையும் கருத்தில் கொண்டு தனது நல்ல மனநிலையை வெளிப்படுத்தும் நோக்கோடு பதவி விலகியிருக்கிறார். இது வரலாற்றில் முன்னுதாரணமாகும்.

இது தொடர்பில் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவதற்கு இடையில் அவர் பெற்ற பட்டம் உண்மையாக இருந்தாலும்கூட அந்தப் பட்டம் உறுதிப்படுத்தப்படும் வரைக்கும்தான் விலகி இருப்பேன் என்று அவர் கூறுவது மிகப்பெரும்ஜனநாயகமாகும். அந்தவகையில் சபாநாயகர் மேற்கொண்ட விடயத்தை நாங்கள் வரவேற்கிறோம் - என்றார்.

## சபாநாயகரின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றிணைந்து புதிய ஜனாதிபதி ஒருவரையும் புதிய ஆளும்தரப்பையும் தெரிவு செய்திருந்தனர். பொதுத் தேர்தலின்போது தேசிய மக்கள் சக்திக்கு நாடாளுமன்றத்தில் அதிகப் படியான ஆசனங்கள் கிடைக்கப்பெற்றன. வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, மலையகம் என அனைத்து மக்களினதும் ஆதரவுடன் எம்மால் அந்த வெற்றியைப் பெற முடிந்தது.

எமக்கு கிடைத்த அந்த மக்களாணையில் பல எதிர்பார்ப்புகள் உள்ளன என்பதை நாம் நன்கறிவோம். அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் உள்ளிட்ட முழு ஆளும்தரப்பும் மக்கள் ஆணையின் நோக்கத்தைப் பற்றிய புரிதல் மற்றும் பொறுப்புக்கூறலை உணர்ந்துள்ளது. எனவே அந்த மாற்றத்தை ஏற்படுத்துவதே எமது முதன்மை நோக்கமாகும்.

எமது பொருளாதார கொள்கைகள் தொடர்பில் நாம் நாட்டு மக்களுக்குத் தெளிவுப்படுத்தி இருந்தோம். வீழ்ந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை தேசிய மக்கள் சக்தி எவ்வாறு மேம்படுத்தப் போகிறது என்ற சந்தேகம் மக்களிடத்தில் இருந்தது.அந்த சந்தேகம் சாதாரணமானதாகும்.

ஜனாதிபதி பதவியேற்று இரண்டரை மாதங்கள் ஆகியுள்ளது. அதேபோன்று அமைச்சரவையை நியமித்து மூன்று வாரங்கள் கடந்துள்ளன. இந்த குறுகிய காலப்பகுதிக்குள் புதிய ஆளும்தரப்பு நாட்டின் பொருளாதாரத்தைஎவ்வாறுமுகாமைத்துவம் செய்கிறது என்பதை உங்களால் அவதானிக்க முடியும்.

பங்குச் சந்தையின் வளர்ச்சி நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது. ஆளும்தரப்பின் வரி வருமானம் அதிகரித்துள்ளது. அதேபோன்றுதேசியஉற்பத்தியை15வீதமாக அதிகரிப்பதற்கும் எதிர்பார்த்துள்ளோம். கலால் திணைக்களத்தின் ஊடாக 200 பில்லியன் ரூபாய் வருமானத்தை உழைத்துள்ளோம். மறைமுக வரி மற்றும் உழைக்கும் போது அறவிடும் வரிகளை குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

அரச வருமானத்தை அதிகரிப்பது எமது இலக்காகும். இது சிரமமான பணியாகும். சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளோம். அவற்றைமுகாமைத்துவம் செய்துகொண்டேஎமதுபொருளாதாரத்தையும் முன்னோக்கிக் கொண்டு செல்லவேண்டும்.

மேலும்நாட்டைமேம்படுத்தவும்தரமான அரசியல் கலாசாரத்தை தோற்றுவிக்கவுமே எமக்கு மக்களாணை கிடைத்துள்ளது. எமது கொள்ளைகளில் ஒருபோதும் மாற்றம் ஏற்படாது. இதன் காரணமாகவே சபாநாயகர் பதவி விலகியுள்ளார். எதிர்காலத்தில் அவரது கல்வித்தகைமைதொடர்பானஆவணங்களை முன்வைப்பார். தமது தகைமைகள் குறித்து ஆவணங்களை தற்போது அவரால் முன்வைக்க முடியாமையால் ஒழுக்கமான முறையில் பதவி விலகியுள்ளார்.

இதனைவிட இந்தநாட்டில்பலவிடயங்கள் இடம்பெற்றுள்ளன. ஆனால் இதற்கு முன்னர் இவ்வாறான முன்மாதிரியான அரசியல் கலாசாரம் இருக்கவில்லை. தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்துள்ள மக்களாணையின் அர்த்தம் தொடர்பிலான ஆழமான சிந்தனை எமக்குள்ளது. எனவே அதற்கேற்ப நாம் செயற்படுவோம் என்றார்.

## புதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் நாடாளுமன்றத்தின் அடுத்த அமர்வில் முதல் பணியாகப் புதிய சபாநாயகர் தெரிவு இடம்பெறவுள்ளது.

அடுத்த வாரம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் மீண்டும் கூடும்போது முதல் பணியாக சபாநாயகர் தெரிவு இடம்பெறவுள்ளது. நாடாளுமன்றத்தில் 159 ஆசனங்களை கொண்டுள்ள தேசிய மக்கள் சக்தி எவ்விதமான போட்டியுமில்லாமல் சபாநாயகரைத் தெரிவு செய்யும்.

## தேர்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிந்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

தேர்தல்கூட்டுக்கான மற்றைய கட்சிகளின் கோரிக்கைகள் தொடர்பாகச் செய்தியாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் தெரிவித்ததாவது:

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இணைந்து பயணிக்கிறார்களா என்பது எனக்கு தெரியாது. எம்மைப் பொறுத்த வரைக்கும்தமிழ்அரசுக்கட்சியின்மத்தியகுழு மற்றும் அரசியல் குழுவிலே கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்பட்டதன் பின்பாகவே சேர்ந்துசெயல்படுதல், இணைந்துபயணித்தல் என்பன பற்றிப் பேசலாம்.

நாங்கள்யாரையும்வெளியில்விடவில்லை. இப்போதும் ஒற்றுமையாக பலமாக செயல்படுவதற்கான கோரிக்கைகளை முன்வைக்கின்றோம். தேர்தலுக்கு முன்னரும் பகிரங்கமாக கோரிக்கையை முன்வைத்தது தமிழ்அரசுக்கட்சியினர்தான். நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறுகின்றபோது எல்லா மேடைகளிலும் நான் இதனைத் தெளிவாகக் கூறியிருக்கிறேன்.

எங்களுடையகட்சியைபலப்படுத்துவதற்கும் கூட்டமைப்பைஉருவாக்கிமக்களிடம்கொண்டு செல்வதற்கான ஆணையைத் தாருங்கள் என்று மக்களிடம் கேட்டிருந்தேன். அந்த ஆணையை மக்கள் தந்திருக்கிறார்கள். எனினும் தனி மனிதனாக நான் அதனைச் செய்யமுடியாது மத்தியகுழு மற்றும் அரசியல் குழுவின் கூட்டு முடிவின் பிரகாரம் அதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் - என்றார்.

## பதவி விலகலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபாநாயகரின் பதவி விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்று ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க நாடாளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

சபாநாயகரின் கலாநிதிப் பட்டம் போலியானது, அவர் இலங்கை மக்களை ஏமாற்றுகிறார் என்று எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கியதை அ-டுத்து சபாநாயகர் தனது பதவி விலகலை வெள்ளிக்கிழமை அறிவித்தார்.

அதுதொடர்பாகஅவர்விடுத்தஅறிக்கையில், தனது கல்வித் தகுதி தொடர்பில் சமூகத்தில் எழுந்துள்ள பிரச்சினை காரணமாக தனது பதவியிலிருந்து விலகுகிறார் என்று தெரிவித்திருந்தார். தனது கலாநிதிப் பட்டத்தை நிரூபிப்பதற்குத்தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் தான பதவி விலகுகிறார் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து தனது பதவி விலகலை அரசுத்தலைவர் அநுரகுமார திசநாயக்கவிற்கு முறைப்படி கடிதம் மூலம் அவர் அறிவித்திருந்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# செம்மலை,நாயாறு இடங்களில் கனிய மணல் அகழ்வு முயற்சி

## கடும் எதிர்ப்பால் கைவிடப்பட்டது

முல்லைத்தீவு - செம்மலை, நாயாறு உள்ளிட்ட இடங்களில் மிட்வெஸ்ட் ஹெவி சாண்ட்ஸ் பிறைவேட் லிமிடட் எனும் நிறுவனம் இல்மனைட் அகழ்விற்கு எடுத்த முயற்சி, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் அப்பகுதி மக்களின் கடுமையான எதிர்ப்பால் வெள்ளிக்கிழமை தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை மக்களுடைய அனுமதியின்றி, அத்துமீறி எமது இடங்களில் கனியமணல் அகழ்வு மேற்கொள்ள முடியாதெனவும் உடனடியாக இந்த அகழ்வு முயற்சிகளைக் கைவிட்டு இங்கிருந்து வெளியேறுமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மற்றும் பொதுமக்கள் தமது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

ஏற்கனவே கொக்கிளாய் பகுதியில் அப்பகுதி மக்கள் இடப்பெயர்வைச் சந்தித்திருந்தபோது, மக்களுக்குரிய சுமார் 44 ஏக்கர் வயல் காணிகளை அத்துமீறி அபகரித்து அங்கு கனிய மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டிருப்பதை நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் சுட்டிக்காட்டியதுடன், அந்த இடங்கள் மீள் நிரப்பப்படாமல் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அங்கு கடலரிப்பு அபாயம் ஏற்பட்டிருப்பதாக மக்கள் தம்மிடம் முறையீடு செய்துள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்தார்.

இந்நிலையில் தற்போது செம்மலை, நாயாறு உள்ளிட்ட இடங்களில் கனியமணல் அகழ்வதாலும், செம்மலையில் அமைக்கப்பட்டுள்ள உவர்நீர் தடுப்பணை பாதிக்கப்பட்டு பாரிய அனர்த்தங்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதையும், மக்களின் வயல் நிலங்கள், குடியிருப்புக்கள் இதனால் பாதிக்கப்படும் என்பதையும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது தெரிவித்தார்.

எனவே மக்களுக்கு பாதகமான இந்த கனியமணல் அகழ்வை ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும் தனது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டார்.

மேலும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியில்லாமல், இப்பகுதி மக்களின் அனுமதியில்லாமல் எவ்வாறு இங்கு கனியமணல் அகழ்வதற்கு வருகை தரமுடியும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது கேள்வி எழுப்பியதுடன், உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்துரைராசாரவிகரன்மற்றும் அப்பகுதி மக்களின் கடுமையான எதிர்ப்பினைத் தொடர்ந்து கனியமணல் அகழ்வுக்குரிய முதற்கட்ட செயற்பாடுகளுக்கு வருகைதந்த மிட்வெஸ்ட் ஹெவி சாண்ட்ஸ் பிறைவேட் லிமிடட் நிறுவனத்தினர் அங்கிருந்து வெளியேறியிருந்தனர்.





இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் சிங்கராசா பிரதஸ், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் இளையதம்பி தணிகாசலம், நாயாறு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள், அப்பகுதி பொதுமக்கள் என பலரும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வட மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தால் கவனவீர்ப்புப் போராட்டம்

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக வெள்ளிக்கிழமை கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தாங்கள் பட்டப்படிப்பை நிறைவு செய்து 5 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்ற போதிலும் அரச வேலைவாய்ப்பு தமக்கு இதுவரை வழங்கப்படவில்லை.

எனவே புதிதாக ஆட்சி அமைத்திருக்கும் அரசாங்கம் தமக்கான அரச நியமனத்தை வழங்கவேண்டும் என்று வலியுறுத்தியே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் வடக்கு மாகாணத்தை சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் பலர் கலந்துகொண்டனர்.









# கிழக்கு மாகாண கல்வித் துறையிலுள்ள குறைபாடுகளை நிவர்த்திக்கவேண்டும்

## இம்ரான் எம்.பி. ஆளுநரிடம் கோரிக்கை

கிழக்கு மாகாண கல்வித் துறையிலுள்ள குறைபாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மக்ரூப் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகரவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் ஆளுநரை சந்தித்து உரையாற்றும் போதே இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் -

கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் பணி புரியும் கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்கள் வெளிநாட்டுவிடுமுறைமற்றும்வெளிநாடுகளின் சமய யாத்திரைக்கு விண்ணப்பித்து அதற்கான அனுமதி உரிய காலத்தில் வழங்கப்படாததால் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக உரிய திகதிக்கு சில மாதங்களுக்கு முன் விண்ணப்பித்தாலும்அனுமதிஉரியகாலங்களில் வழங்கப்படுவதில்லை என்று முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது. அனுமதியை எதிர்பார்த்து காத்திருக்கும் இவர்கள் தொடர்ந்து கடமைக்குச் செல்கின்றனர். எனினும், இவர்கள் விண்ணப்பித்த லீவுத் திகதியிலிருந்து வலயக்கல்வி அலுவலகங்களால் சம்பளம் இடைநிறுத்தப்படுகின்றது. நிர்வாகச் சீர்கேடுகளினால் இந்த அசௌகரியம் ஏற்படுகின்றது.

இவ்வாறு விண்ணப்பித்தவர்களின் கோவைகள் மாதக் கணக்கில் மாகாணக் கல்வித் திணைக்களம் மற்றும் மாகாணக் கல்வி அமைச்சில் தேங்கியிருப்பதாகவும் இதனை விரைவு படுத்த இலஞ்சம் எதிர்பார்க்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. அதேபோல வெளிநாட்டு லீவு அனுமதியிலும் பாரபட்சம் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

எனவே, தயவு செய்து இதன் உண்மைத் தன்மைகளை அறியும் பொருட்டு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறுஅக்கடிதத்தில்குறிப்பிடப்பட்டுள்ளது.

# அத்தியாவசிய பிரச்சினையை புறந்தள்ளி சபாநாயகரின் பட்டம்

தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற பெரு வெற்றியின் உயர்நிலையானது, சபாநாயகர் அசோக சபுமல் ரன்வல பயன்படுத்திய கலாநிதி பட்டத்தின் நம்பகத்தன்மையைச் சுற்றி எழுப்பப்பட்ட சிக்கல்களால் அச்சுறுத்தப்பட்டுள்ளது.

திடீரென வெடித்த இந்தச் சர்ச்சையானது தேசிய மக்கள் சக்தியின் புகழுக்குப் பெரும் பங்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதே பட்டத்தை (கலாநிதி) வைத்திருக்கும், அதே சமயம் மருத்துவத்துறையில் இருக்கும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸகூட, இந்த விவகாரம் குறித்து சிலநாட்களுக்கு முன்னர் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிப்பதைத் தவிர்த்துவிட்டார்.

இது தொடர்பாக சபாநாயகரைப் பாதுகாக்கத் தவறிய அவர், சபாநாயகருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படுகிறதா இல்லையா என்பதைப் பொறுத்து ஆளும்தரப்பு என்ன செய்யப் போகிறது என்பதை அடுத்த வாரம் அறிவிப்பதாகக் கூறி விவகாரத்தை முடித்து வைத்தார்.

வெள்ளிக்கிழமைசபாநாயகர்தனதுபதவியைவிட்டு விலகிய பின்னர் அதுவொரு முன்மாதிரியான செயல், தனது கலாநிதிப் பட்டம் தொடர்பான ஆவணங்களைப் பெற்றதும் ரன்வல அதனை நிரூபிப்பார் என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்தாலும், சபாநாயகரின் பதவி விலகலுக்கு முன்னர் அது குறித்துக் கருத்துத் தெரிவிக்க அவர் சங்கடப்பட்டார் என்பது தெளிவாகவே தெரிந்தது.

சபாநாயகரின் கல்வித் தகைமை குறித்த விடயம் சட்டபூர்வமானது அல்ல, தார்மீகமானது என்பதை கிட்டத்தட்ட அனைவரும் ஒப்புக்கொள்கிறார்கள். சபாநாயகர் பதவிக்கு, ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராக மட்டும் இருந்தால் போதுமானது. சபாநாயகராவதற்கான தகுதி எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கான தகுதி, இலங்கையின் குடிமகனாக இருப்பதும் குற்றங்களுக்காக நீதிமன்றத்தால் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றவராக இருக்கக்கூடாது என்பதும் மட்டுமே. அப்படிப் பார்த்தால் ரன்வல சபாநாயகராகத் தொடர்வதற்கு அவரது கலாநிதிப் பட்டத்தை உறுதிப்படுத்த வேண்டியவராக இல்லை.

பதவி விலகிய சபாநாயகரின் கலாநிதிப் பட்டம் நம்பகத்தன்மையற்றது என நிரூபிக்கப்பட்டாலும், அவர் அந்தப் பதவிக்கு சட்டப்பூர்வமாக தகுதி பெற்றவர்தான். இருப்பினும், வலுவான நாடாளுமன்றத்தை உருவாக்க தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மக்கள் குழுவிற்கு தலைமைத்துவத்தை வழங்குவதற்கான தகுதியை அவர் இழந்துவிட்டார். தேசிய மக்கள் சக்தி பல தசாப்தங்களாக இந்த நாட்டின் அனைத்து சமூக பொருளாதார சீர்கேடுகளையும் அரசியல்வாதிகளின் ஒழுக்க சீர்கேட்டிற்கு காரணம் என்று சரியாக கூறி அரசியல் கலாசாரத்தை மாற்றப்போவதாக சபதம் செய்திருக்கின்றது. அந்தச் சூழலிலேயே ரன்வல விவகாரம் முக்கியத்துவம் பெறுகிறது.

சபாநாயகர் ரன்வலவின் கலாநிதி பட்டத்தின் நம்பகத்தன்மையை நிரூபிக்குமாறு பேராசிரியர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி, தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய போன்ற பலர் கோரிக்கை விடுத்திருந்தனர். அல்லது அவர் பதவி விலகவேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தனர். பின்னர் எதிர்க் கட்சிகள் அதனைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டன. அவை நாடாளுமன்றத்தில் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவோம் என்று மிரட்டின. அது ஒரு போதும் வெற்றிபெறாது என்றபோதும் தேசிய மக்கள் சக்தியின் ஆளும்தரப்பை அரசியல் சவாலுக்குட்படுத்தி மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தும் விதத்தில் இந்த விடயத்தைக் கையாள அவை விரும்பின.

இருந்தாலும் இந்த விவகாரம் மக்கள் தமது கவனத்தைக் குவித்திருக்கவேண்டிய அடிப்படையான விடயத்திலிருந்து அவர்களைத் திசைதிருப்புவதற்கான ஒரு கவனக்கலைப்பானாக மாறிவிட்டிருந்தது என்பதுதான் உண்மை.

தேசிய மக்கள் சக்தியின் செயலற்ற தன்மையால் இலங்கையில் பல விடயங்கள் வெகுதூரம் சென்றுவிட்டன. இது சில நேரங்களில் தேசிய மக்கள் சக்திக்கு ஒரு தற்காலிக பின்னடைவாக இருந்தாலும், அமைப்பு மாற்றத்திற்காக உண்மையாக ஏங்கிக்கொண்டிருக்கும் பல ஆதரவாளர்கள் இந்த எதிர்பாராத நிகழ்வுகளால் அவமானமடைந்து கிளர்ச்சியுற்றுள்ளனர் என்று தெரிகிறது. அண்மைக் காலமாக அரிசி, தேங்காய் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் அவர்களைக் கடுமையாகப் பாதித்துள்ளது. அரிசித்தட்டுப்பாட்டை தீர்க்க முடியாமல் ஆளும் தரப்பு திணறுவது அவர்களுக்கு புரிபடாத புதிராகத் தெரிகின்றது. இந்தப் பிரச்சினைகளில் ஆளும்தரப்பின் விளக்கம் அல்லது நடவடிக்கையில் தாமதத்தால் அதன் மீது நம்பிக்கை இழக்கத் தொடங்கியுள்ளனர்.

பிரபல யூ டியூப்பர் ஒருவர் சில நாட்களுக்கு முன்பு ரன்வலவின் மகள் தனது தந்தையின் கலாநிதிப் பட்டத்தை உறுதிப்படுத்தினார் என்று மேற்கோள் காட்டினார், அதே மூச்சில் அவர் தனது பெயருக்கு முன் தனது பட்டத்தை பயன்படுத்தவில்லை என்பதையும் சுட்டிக்காட்டினார். தன் தந்தை தனது கல்வித்தகுதியை தனக்கான அணிகலனாக ஒருபோதும் பயன்படுத்தவில்லை என்று கூறுவதன் மூலம் அவர் என்ன கூறமுற்படுகிறார் என்பது தெரியவில்லை. ஏனென்றால் அவரது பெயருக்கு முன்பாக அவரது பட்டத்தை மற்றவர்கள் பயன்படுத்துவதை அவர் ஒருபோதும் தடுத்தவர் அல்லர் என்பது அனைவரும் அறிந்த ஒன்று.

இந்த விவகாரத்தில் ரன்வல தன் பட்டத்தைத் தனே பயன்படுத்தவில்லை என்பது அவரது நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துப் போதுமானது அல்ல என்பது உறுதி. இதனாலேயே அவரைப் பாதுகாப்பதற்கும் அவரை நியாயப்படுத்துவதற்கும் தேசிய மக்கள் சக்தியின் ஏனைய தலைவர்கள் தயக்கம் காட்டினார்கள். ரன்வாலாவின் தலைப்பிற்கான சில ஆவண ஆதாரங்களை எதிர்பார்த்து அடுத்த வாரம் வரை அவருக்குக் காவல அவகாசம் வழங்கலாம் என்று அவர்கள் காத்திருந்திருக்கலாம். ஆனால் உண்மை என்னவென்றால் கடந்த பல ஆண்டுகளாக பல ஆவணங்களிலும் அவரது பெயரின் முன்னொட்டாக கலாநிதி என்னும் பட்டம் இருக்கின்றது. அப்படியிருக்கும்போது அவரிடம் அதற்கான ஆவணங்கள் இருக்கவில்லை என்பது ஏற்புடையதன்று. உண்மையில் அவர் ஒரு கலாநிதி என்றால் அந்தப் பட்டத்தை அவரது பெயரின் முன்னொட்டாக மற்றவர்கள் பயன்படுத்தத் தொடங்கியபோதே அதற்கான ஆவணங்களைப் பெற்று அவர் பத்திரப்படுத்தியிருப்பார்.

கடந்த மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலுக்கு சமர்பிக்கப்பட்ட வேட்பாளர் பட்டியலில் ஏராளமான படித்த ஆண்களும் பெண்களும் சேர்க்கப்பட்டதன் மூலம் தேசிய மக்கள் சக்தி, ஒரு வகையில் மக்களின் நம்பிக்கையை வென்றது என்பதில் சந்தேகமில்லை. மேலும் இந்த வேட்பாளர்களின் முன்னொட்டாக இருந்த கலாநிதி, பேராசிரியர் மற்றும் வழக்கறிஞர், மருத்துவர், பொறியாளர்கள் போன்ற பட்டங்களை வைத்து அவர்கள் நன்கு படித்தவர்கள் என மக்கள் அடையாளம் கண்டனர். அத்தகைய தலைப்புகளின் எண்ணிக்கை உண்மையில் வாக்குகளை ஈர்த்திருந்தால், இல்லாத தலைப்பைப் பயன்படுத்துவது மோசடிக்கு சமம் என்பதை யாரும் மறுக்க முடியாது, எனவே, இது புறக்கணிக்கப்பட வேண்டிய அல்லது சிறுமைப்படுத்தப்பட வேண்டிய ஒன்றல்ல.

ஆளும்கட்சியாகஇருந்தாலும்சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும்சரி, அரசியல்வாதிகளின் ஒழுக்கக்கேடான செயல்களை கேள்வி கேட்க சாதாரண மக்களுக்கு மறுக்க முடியாத உரிமை உள்ளது. ஓர் அரசியல்வாதி தவறான தலைப்பைப் பயன்படுத்தினால், அதில் தெரிந்தோ அல்லது அறியாமலோ தேவையற்ற நன்மைகளைப் பெற்றால், அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். பணத்துக்காக இதுபோன்ற பட்டங்களை வழங்கும் நிறுவனங்கள் இருப்பதால், போலியான தலைப்புடன் தன்னை அடையாளம் காட்டுவது குற்றமல்ல. இருப்பினும், உங்களை நம்பும் நபர்களை ஏமாற்றுவது, நீங்கள் அதை அர்த்தப்படுத்தவில்லை என்றாலும், அவமதிப்பு மற்றும் இழிவானது. ரன்வல தனது பெயரையும், தூய்மையான அரசியலுக்கான பெரும் ஆணையைப் பெற்ற தனது கட்சியின் பெயரையும் தெளிவுபடுத்தத் தவறினால் ஒழிய, சபாநாயகர் பதவியைவிட்டு விலகியது பொருத்தமான செயலே.

இறுதியாக, ஆளும்தரப்பிற்கும் மக்களுக்கும் முதன்மையான முன்னுரிமையாக இருந்திருக்க வேண்டிய வாழ்க்கைச் செலவினம் குறித்த விவாதங்களைவிட ஒரு பயனற்ற பிரச்சினையே கடந்த வாரத்தில் அதிகமாகப் பேசப்பட்டுள்ளது. அந்த வகையிலும் சபாநாயகரின் செயல் ஏற்புடையது அல்ல.



காலைக்கதிர் Kalaikkathir

# அம்பாறைமாவட்ட ஒருங்கிணைப்பு குழு ஜும் ஆ தினங்களில் இனிக் கூடாதாம்

## பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ உறுதி

(ஹமீட்)

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் ஜும்ஆ தினங்களில் நடத்துவதில்லை என்று தான் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் இணைத்தலைவராக பதவி வகித்த காலத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கும் நிலையில் இன்று- ஜும்ஆ தினத்தில் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நடைபெற்றது குறித்து தனது கண்டனத்தை அம்பாறை மாவட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.






அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அங்கு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் உதுமாலெப்பை தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் -

ஜும்ஆ தினத்தில் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் முஸ்லிம் திணைக்களத் தலைவர்களும் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதுடன் எதிர் காலங்களில் ஜும்ஆ தினங்களில் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்கள் நடத்துவதை தவிர்க்குமாறு வேண்டிக் கொண்டார்.

இதற்கு பதிலளித்த பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ மற்றும் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம ஆகியோர் எதிர்வரும் காலங்களில் வெள்ளிக்கிழமை தினங்களில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நடாத்தப்படுவதை தவிர்த்துக் கொள்வதாகவும் இது தொடர்பாக ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு தாங்கள் மனம் வருந்துவதாகவும் தெரிவித்தார்கள்.

# எம்.கே. முருகானந்தனின் ஐந்து நூல்கள் வெளியீடு



வைத்திய கலாநிதி எம்.கே. முருகானந்தனின் ஐந்து நூல்களின் வெளியீட்டு விழா பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்றத்தில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 3 மணிக்கு எழுத்தாளர் க. பரணீதரன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

உறங்கும் உண்மைகள் (சிறுகதைத் தொகுதி), இரசித்த சினிமா (சினிமா கட்டுரைகள் ), மறந்துபோகாத சில ( கவிதைத்தொகுதி ), ஈழத்துக் கிராமியப் பாடல்கள் (கட்டுரை), வாசிப்பில் நினைந்துறல் (விமர்சனக் கட்டுரைகள் ) ஆகிய நூல்களே ஜீவநதி பதிப்புக்களாக வெளியிடப்படுகின்றன.

வரவேற்புரையை சி.சித்திராதரனும், வெளியீட்டுரையை எழுத்தாளர் இ. இராஜேஸ்கண்ணனும், , கருத்துரைகளை அ. யேசுராசா, த. ஆனந்தகுமார், திருமதி கோகிலா மகேந்திரன், கு.வசீகரன், து. குலசிங்கம், ஏற்புரையையும் நன்றியுரையையும் வைத்திய கலாநிதி எம்.கே. முருகானந்தனும் நிகழ்த்துவர்.

# இலக்கியப் போட்டியில் சிறுகதை ஆக்கத்தில் கற்பிட்டி டில்ஷா மாவட்டத்தில் முதலாமிடம்

(சியாஜ்)

கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் புத்தளம் மாவட்ட செயலகம் இணைந்து நடத்திய மாவட்ட இலக்கியப் போட்டித் தொடரில் சிறுகதை ஆக்க போட்டியில் ’கோடை மழை’ எனும் தலைப்பில் சிறுகதையை எழுதிய கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையின் உயர் தரத்தில் கல்வி பயிலும் மாணவி எம்.ஜே.பாத்திமா டில்ஷா அதி சிரேஷ்ட பிரிவில் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டார்.

மேலும் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கற்பிட்டி பிரதேச செயலகம் இணைந்து நடாத்திய பிரதேச இலக்கியப் போட்டித் தொடரிலும் சிறுகதை ஆக்க போட்டியில் முதலாம் இடத்தையும் கல்வியின் சிறப்பு எனும் கவிதை போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ள இவர் கற்பிட்டியைச் சேர்ந்த யூ.எம் ஜனாப் மற்றும் எம்.டீ.சரீபா ஆகியோரின் மூத்த புதல்வியாவார்.

# புனித அல்–குர்ஆனை மனனம் செய்த ஹாபிழ் அப்துல்லாஹ்வுக்கு கௌரவம்

## மாவடிப்பள்ளி நம்பிக்கையாளர் சபையும் மக்களும்

( நூருல் ஹுதா உமர் )

மாவடிப்பள்ளி நம்பிக்கையாளர் சபையின் ஏற்பாட்டில் மாவடிப்பள்ளியைச் சேர்ந்த பிறவியிலேயே தனது இரு கண்பார்வையை இழந்து’ இந்த உலகத்தை நான் பார்க்கவில்லை என்றாலும் இந்த உலகம் என்னை பார்க்க வேண்டும்’ என்ற ஒரு குறிக்கோளோடு அல்-குர்ஆனை மனனம் இட்டு ஹாபிழாக பட்டம் பெற்றுள்ள அல் ஹாபிழ் அப்துல் அமீர் அப்துல்லாஹ் அவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை ஜும்ஆ வை தொடர்ந்து மாவடிப்பள்ளி பெரிய ஜும்ஆ





பள்ளிவாசலில் நம்பிக்கையாளர் சபையின் தலைவர் எம்.ஐ.எம். மனாப் ஆசிரியர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கண்ணியமிக்க உலமாக்கள், மாவடிப்பள்ளி பெரிய ஜும்ஆ பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், புத்தி ஜீவிகள், மசூரா சபை உறுப்பினர்கள், ஊர்மக்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் வவுணதீவில் உலருணவுப் பொதிகள்

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழுகின்ற மக்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கும்

அற்றார் அழி பசி தீர்த்தல் என்ற திட்டத்தை கொரோனாப் பேரிடர் ஏற்பட்ட காலத்திலிருந்து முன்னெடுத்து வருகிறது.

இந்தத் திட்டத்தின் தொடர்ச்சியாகக் கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு வவுணதீவுப்பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு உலருணவுப் பொதிகளை வழங்கியுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் சூரியகுமார், சூழல் பாதுகாப்பு அணியின் துணைச்

செயலாளர் த.யுகேஸ் ஆகியோர் கர்ப்பிணித் தாய்மார்களிடம் உலருணவுப் பொதிகளை வழங்கி வைத்துள்ளனர்.

வவுணதீவில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட பாலக்காடு, சந்தீவு, சொருவமுனை, இறக்கத்துமுனை, கரவெட்டி ஆகிய பகுதிகளிலிருந்து குடும்பநல உதவியாளர்களால் அடையாளங் காணப்பட்ட கர்ப்பிணித்தாய்மார்களுக்கே உலருணவுப்பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.





காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு மாகாண அதிபர், ஆசிரியர்களுக்கு பாராட்டுக் கிடைப்பதிலும்கூட பாரபட்சம்

## இம்ரான் எம்.பி. குற்றச்சாட்டு

(ஹஸ்பர்)

கடந்த ஆண்டு க.பொ.த சா.த. பரீட்சைப் பெறுபேறுகளின் படி கிழக்கு மாகாணம் தேசிய மட்டத்தில் 2 ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது. இது தொடர்பாக நடத்தப்பட்ட பாராட்டு விழாக்களில் அதிபர் ஆசிரியர்கள் புறக்கணிக்கபட்டுள்ளதாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மக்ரூப் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் இரத்தினசேகரவின் கவனத்திற் கொண்டு வந்துள்ளார்.

ஆளுநரை நேரில் சந்தித்த அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

கடந்த காலங்களில் க.பொ.த (சா.த) பரீட்சை அடைவு மட்டத்தில் பின்னடைந்திருந்த கிழக்கு மாகாணம் கடந்த ஆண்டு 2ஆம் இடத்திற்கு முன்னேறியிருந்தது. இதற்காக கிழக்கு மாகாண பிரதம செயலாளரால் மாகாணக் கல்வி அமைச்சு செயலாளர், மாகாணக்



கல்விப் பணிப்பாளர் ஆகியோர் பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இதேபோல மாகாணக் கல்வி அமைச்சுச் செயலாளரால் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

எனினும், அடைவு மட்ட அதிகரிப்புக்கு பிரதான காரணமாக இருக்கின்ற ஆசிரியர்கள், அதிபர்கள் எவரும் இது விடயத்தில் இதுவரை கௌரவிக்கப்படவில்லை. அவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இதனால் அவர்கள் பெரிதும் மன உழைச்சலுக்கு ஆளாகி உள்ளனர்.

இது போன்ற பாரபட்சங்கள் தங்களது நிர்வாகத்தின் கீழ் இனிமேல் இடம்பெறாதிருக்கும் வகையில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும் என்பதை தங்களது மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

எனவே தயவு செய்து இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு இந்தப் பெறுபேறு விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிபர், ஆசிரியர்களையும் விரைவில் கௌரவிக்க ஏற்பாடு செய்ய வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் ஆளுநரைக் கேட்டுக்கொள்கிறேன். - என்றார்.

# மயோன் சமூக சேவை அமைப்புக்கும் ரிஷாத் எம்.பிக்கும் இடையில் சந்திப்பு

அம்பாறை மாவட்ட மக்களின் பிரச்சினைகள், அமைப்பின் எதிர்கால செயற்பாடுகள் குறித்த பல விடயங்களை நோக்காகக் கொண்டு மயோன் சமூக சேவை அமைப்புக்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் றிஷாத் பதியுதீனுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு வெள்ளிக்கிழமை மாலை கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்துள்ள கட்சியின் பிரதான காரியாலயத்தில் இடம்பெற்றது.





மயோன் சமூக சேவை அமைப்பின் தலைவரும், கட்சியின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளருமான றிஸ்லி முஸ்தபாவின் தலைமையில் கட்சியின் தலைவர் றிஷாத் பதியுதீனின் பங்கேற்புடன் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

அமைப்பின் பொதுச் செயலாளர் சுகையில் ஜமால்டீன் அமைப்பின் கடந்த கால, எதிர்கால திட்டங்கள் குறித்து விரிவாக விளக்கினார். றிஸ்லி முஸ்தபா இளைஞர்கள் தொடர்பான கட்சியின் எதிர்கால திட்டங்கள் குறித்து விளக்கினார். மேலும் அமைப்பின் செயற்பாடுகளுக்கு தன்னால் முடியுமான பங்களிப்புகளை வழங்குவதாக கட்சியின் தலைவர் தெரிவித்தார்.

மேலும் இவ் கலந்துரையாடல் நிகழ்வில் மயோன் சமூக சேவை அமைப்பின் உறுப்பினர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.12.2024இல் வெளியிடப்பெற்றது